# நில ஆர்ஜித வழக்குகளுக்கான சிறப்பு சார்பு நீதிமன்றம், அரக்கோணம், ராணிப்பேட்டை மாவட்டம்.

முன்னிலை : **திரு. G. யுவராஜ், M.A., M.L.,**
சிறப்பு சார்பு நீதிபதி,
நில ஆர்ஜித வழக்குகளுக்கான சிறப்பு சார்பு நீதிமன்றம்,
அரக்கோணம், ராணிப்பேட்டை மாவட்டம்.

2026–ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், 25–ஆம் நாள், புதன்கிழமை

**அசல் வழக்கு எண் 101/2025**
**(CNR No. TN-RP-07-000-110-2025)**
(அரக்கோணம் சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண் 38/2014)

கோவிந்தசாமி, வயது 70,
த/பெ.லேட்.சுப்பராய ரெட்டி,
எண்.212, தெற்கு தெரு, வயிலம்பாடி கிராமம்,
சோளிங்கர் தாலுக்கா, ராணிப்பேட்டை மாவட்டம். .. வாதி

எதிராக

1. நரசிம்மன், வயது 75,
   த/பெ.லேட்.சுப்பராய ரெட்டி,
2. நாகராஜ், வயது 32, த/பெ.நரசிம்மன்,
3. தங்கராஜ் (எ) அருண்குமார், வயது 29,
   த/பெ.நரசிம்மன்,
4. சாந்தி, வயது 55, க/பெ.நரசிம்மன்,
5. குப்பன், வயது 55, த/பெ.முனுசாமிரெட்டி,
6. கருணாவதி, வயது 45, க/பெ.குப்பன்,
7. சுமித்ரா, வயது 27, க/பெ.நாகராஜ்
8. தாட்சாயணி, வயது 25,
   க/பெ.தங்கராஜ்(எ) அருண்குமார்,

அனைவரது முகவரி – தெற்கு தெரு, வயிலம்பாடி கிராமம்,
சோளிங்கர் தாலுக்கா, ராணிப்பேட்டை மாவட்டம். .. பிரதிவாதிகள்

தாவா சொத்தில் வாதிக்குண்டான உரிமையை விளம்புகை செய்யக் கோரியும், அதன் தொடர்ச்சியாக தாவா சொத்தினை வாதி அமைதியான முறையில் அனுபவித்து வருகையில், பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ எவ்வித இடைஞ்சல், தடங்கலும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் மற்றும் வழக்கு செலவுத் தொகை கோரியும் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

| | | |
|---|---|---|
| இந்த வழக்கு தாக்கல் செய்த நாள் | : | 22.03.2024 |
| வழக்கு கோப்புக்கு எடுக்கப்பட்ட நாள் | : | 22.03.2024 |
| வழக்கின் மதிப்பு | : | ரூ.1,18,215/–. |
| செலுத்தப்பட்ட நீதிமன்ற கட்டணம் | : | ரூ.1,774/– |
| நீதிமன்ற கட்டணச் சட்டம், பிரிவு | : | 25 (b) |
| வழக்குமூலம் ஏற்பட்ட நாள் | : | 21.09.2004, December 2022, 24.01.2024. |
| வழக்குமூலம் ஏற்பட்ட இடம் | : | வயிலம்பாடி கிராமம், சோளிங்கர் தாலுக்கா. |

இவ்வழக்கானது கடந்த 22.03.2024 அன்று அரக்கோணம் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, அதே தினம் அந்நீதிமன்ற அசல் வழக்கு எண் 38/2024–ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு பின்னர் மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிபதி, ராணிப்பேட்டை அவர்களின் 04.12.2024 தேதியிட்ட உத்தரவின்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, கடந்த 25.02.2025 அன்று இந்நீதிமன்ற அசல் வழக்கு எண் 101/2025–ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ள இவ்வழக்கின் மீதான விசாரணையானது கடந்த 12.03.2026 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபோது, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.

R. நரசிம்மன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 8 வரை பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. N. கதிர் நரசிம்மன் அவர்கள் ஆஜராகி பின்னிட்டு வாதி தரப்பு சாட்சியை குறுக்கு விசாரணை செய்யும் சமயத்தில் ஆஜராகாததால் பிரதிவாதிகள் தோன்றா தரப்பினர்களாகியும், வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியத்தையும், குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களையும், வழக்கு ஆவணங்களையும் பரிசீலனை செய்தும், வாதி தரப்பு வாதங்களை கேட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் கவனமான பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**தீர்ப்பாணை**

இறுதியாக, தாவா சொத்தின் மீது வாதிக்குண்டான உரிமையை விளம்புகை செய்யக் கோரியும், அதன் தொடர்ச்சியாக, தாவா சொத்தினை வாதி அமைதியான முறையில் அனுபவித்து வருவதற்கு பிரதிவாதிகள் எவ்வித இடைஞ்சல், தடங்கலும் செய்யக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரியும் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கானது அனுமதிக்கப்படுகின்றது, முடிவில், தாவா சொத்தானது வாதிக்கு பாத்தியப்பட்டது என்ற விளம்புகை பரிகாரமும், அதன் தொடர்ச்சியாக தாவா சொத்தினை வாதி அமைதியான முறையில் அனுபவித்து வருவதற்கு, பிரதிவாதிகளோ, அவரது ஆட்களோ எவ்வித இடைஞ்சல், தடங்கல் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரமும் வழங்கி வாதியின் செலுவுத் தொகையுடன் தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகின்றது.

2026–ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், 25–ஆம் நாளாகிய இன்று இந்நீதிமன்ற முத்திரையுடன் என் கையெழுத்திடப்படுகிறது.

(Sd/–. G. Yuvaraj)

**சிறப்பு சார்பு நீதிபதி,**

நில ஆர்ஜித வழக்குகளுக்கான

சிறப்பு சார்பு நீதிமன்றம், அரக்கோணம்.

**Schedule of property**

In Ranipet District, Sholinghur Taluk, Vailambadi village account

In old Gramanatha S.F.No.143, New Gramanatha S.F.No 264/48- a Vacant site by measuring an extent of East to west Northern side 19 Ft and Southern side 18 Ft and North to South Western side 106 and Eastern side 107 ft, totally 1970 ¼ Sq.Ft.

**Boundaries**

North by S.F.No 263.

South by S.F.No 146A.

East by S.F.No 264/49.

West by S.F.No 264/47.

Market Value is Rs.1,18,215/-

## Cost Memo Details

Cost memo not filed by both parties.

(Sd/-. G. Yuvaraj)

**சிறப்பு சார்பு நீதிபதி,**

நில ஆர்ஜித வழக்குகளுக்கான

சிறப்பு சார்பு நீதிமன்றம், அரக்கோணம்.

**சி.சா.நீ. அரக்கோணம்**

**அ.வ. எண் 101/2025**

தீர்ப்பாணை

நாள் : 25.03.2026